**வென்னப்புவ பிரதேச சபை**

**புத்தளம் மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுலை 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 28 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வென்னப்புவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 தேறிய சொத்துக்களில் குறைவடைதல்

------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 266,941,401 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் தேறிய சொத்துக்கள் ரூபா 270,347,907 தொகையாக காணப்பட்டமையால் ஆண்டின் போது சபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 3,406,506 இனால் குறைவடைந்துள்ளது.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 22,312,812 தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வென்னப்புவ பஸ் தரிப்பிடத்தின் பெறுமதி மற்றும் ரூபா 10,167,200 தொகை பெறுமதியான பொது அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கிரிமெடியானவத்த என்ற காணியின் பெறுமதி என்பன நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஊழியர்களின் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையாகிய ரூபா 7,334,419 தொகை கடன்கொடுத்தோரிடம் மற்றும் திரண்ட நிதியக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2011 ஆண்டு முதல் 2013 வரை பெறவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 16,429,140 தொகை பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 16,429,140 தொகை பெறவேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கில் இருந்து மற்றும் திரண்ட நிதியக் கணக்கில் இருந்து கைவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு தொடர்பான மூலதன உதவி ரூபா 92,900,035 தொகை எனினும், கணக்குகளில் அவை ரூபா 79,324,995 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மூலதன உதவிக் கணக்கு மற்றும் பெறவேண்டிய மூலதன உதவிக் கணக்கு ரூபா 13,575,040 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2013 ஆண்டின் போது கடன்கொடுத்தோர்கள் மற்றும் மூலதன செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 740,000 இற்கான தொகை 2014 ஆண்டின் போது தீர்க்கும் போது தொடர்ந்தும் மூலதன செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 740,000 வீதம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,490,000 இற்கான பொறித்தொகுதிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெக்கோ லோடரின் பெறுமதியினை கணக்குகளில் இருந்து அகற்றும் போது மீண்டும் மோட்டார் வாகனம் மற்றும் மாட்டுவண்டிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் கணக்கு ரூபா 2,490,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்ததுடன், மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கும், அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) காணாமல் போயிருந்த ரூபா 156,550 தொகை பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரத்தின் பெறுமதி நிலையான சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்ததுடன், நன்கொடை ஒன்றாக 2012, 2013 ஆண்டுகளின் போது சபையின் சுற்றாடல் அலகுக்கு கிடைத்திருந்த ரூபா 770,240 பெறுமதியான 600 குப்பை பாத்திரங்களையும் நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்த மூன்று கணக்கு விடயங்களின் பெறுமதி அதனோடு தொடர்புடைய துணைப்பதிவேடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. அத்துடன் இணங்கப்படாத வித்தியாசத்தின் பெறுமதி ரூபா 26,473,320 ஆகும்.

1.3.4 தொங்கல் கணக்கு

------------------------------

இலங்கை வங்கியின் வென்னப்புவ கிளையில் பேணப்படுகின்ற இலக்கம் 0001865986 கொண்ட நடைமுறை கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் மாதம் வங்கி இணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 384,602 இற்கான தொங்கல் கணக்கினை தீர்ப்பதற்காக அல்லது அது தொடர்பாக விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 03 கணக்கு விடயங்களின் பெறுமதி ரூபா 195,251,700 தொகை தொடர்பாக போதியளவு சான்றுகள் காணப்படாமையால் அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2. நிதி செயலாற்றுகை

---------------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது சபையின், மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 38,599,107 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,359,024 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மூலதன உதவி முறையே ரூபா 80,436,306 உம் மற்றும் ரூபா 17,675,347 உம் மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 118,490,311 உம் மற்றும் 39,876,108 இற்கான மூலதன செலவினை கணித்த பின்னர் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 545,122 தொகையாக மாறியிருந்ததுடன், முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,158,283 உம் ஆகியுள்ளன. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 3,613,161 இற்கான குறைவடைதல் ஒன்று காணக் கூடியதாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த நிலுவை வருமானம் தொடர்பான தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட நிலுவையாக வீதவரி 5.9 மில்லியன் ரூபாவும், வாடகை 1.98 மில்லியன் ரூபாவும் , ஏனைய வருமானங்கள் 2.4 மில்லியன் ரூபாவும் காணப்பட்டது.

2.2.2 வீத வரி

----------------

(அ) முன்னைய ஆண்டுடன் நேரொப்ப மீளாய்வாண்டின் போது அறவிடப்படவேண்டிய நிலுவை வீத வரி ரூபா 194,321 இனால் அதிகரித்து இருந்தது. மீளாய்வாண்டின் போது வீதவரி பில்போடப்பட்டவைகளில் ஒட்டுமொத்த குறைவடைதல் ரூபா 223,179 ஆகும்.

(ஆ) 2009 செப்டம்பர் 25 திகதிய இலக்கம் 1574 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அறிவுரைகளின் பிரகாரம் முன்னேற்றமடைந்த கிராமப்புரங்களில் புதிய வீதவரி அலகுகளை விரைவாக இனங்கண்டு வரியினை அறவீடு செய்வதற்காக செயற்பட்டிருக்கவில்லை.

2.2.3 ஆதனங்களை குத்தகைக்கு கொடுத்தல்

------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 84 குத்தகை ஆதனங்களில் 23 இனை குத்தகைக்கு கொடுத்திருக்கவில்லை. குறைந்த விலை கூறல்களை அடிப்படையாக எடுத்தால் இழந்துள்ள வருமானம் ரூபா 1,880,457 ஆகும். அதே போல் முன்னைய ஆண்டுடன் நேரொப்ப சபை இழந்துள்ள குத்தகை வருமானம் ரூபா 4,461,876 ஆகும்.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்

-------------------------------------------

வடமேல் மாகாண பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,220,635 உம் மற்றும் முத்திரை கட்டணத்தின் பெறுமதி ரூபா 94,139,463 ஆகும்.

2.2.5 மிகை விதிப்பு

------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(3) பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 326,335 ஆகும்.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகை செலுத்துவதில் தாமதம் காரணத்தினால் செலுத்தியிருந்த ரூபா 340,423 இற்கான மிகை விதிப்பு விதித்தல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எதிர்காலத்தில் மிகை விதிப்பு விதிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

முகாமைத்துவத் திறமையின்மை

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு .இலங்கை வங்கியின் வென்னப்புவ கிளையில் பேணப்படுகின்ற இலக்கம் 0001865986 கொண்ட நடைமுறைக் கணக்கு மற்றும் இலக்கம் 0001865988 கொண்ட நடைமுறை கணக்கில் வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் முறையே ரூபா 33,955 உம் மற்றும் ரூபா 8,345 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் பெறுமதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வென்னப்புவ வர்த்தக தொடர் கட்டிடத்தில் 4440 சதுர அடி கொண்ட மேல்மாடி 03 வருடங்களை மிகைத்த காலம் முதல் வாடகைக்கு கொடுக்கப்படாமல் வர்த்தக சங்கங்களுக்கு மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கு சாட்டப்பட்டிருந்தது. இவ்வாறு சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வெளிசாராருக்கு இலவசமாக சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் சபை நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த வருமானத்தை இழந்துள்ளது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்